MCOP. 175/2024

நாள். 02.09.2025

ம.சா. 1 – மதுபாலா

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நானும், மற்ற மனுதார்களும் இராமநாதபுரத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். வெவ்வேறு ஊர்களில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். நான் என் கணவருடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எங்களுடைய அன்றாட வாழ்வு மற்றும் செலவுக்காக என் தகப்பனாரை நான் சார்ந்து இருக்க வில்லை என்றால் சரிதான். என் பெரியக்காவின் கணவர் இறந்துவிட்டதால் என் அப்பாதான் அவரை பார்த்துக்கொண்டார். அவ்வாறு நாங்கள் எங்கள் மனுவிலோ, என்னுடைய நிரூபணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக என் தம்பி விபத்து நடந்த 2 நாட்கள் கழித்துத்தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதார்தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வாகனத்தை கவிழ்த்து விட்டார் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் என் தகப்பனார் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயம் என் தகப்பனார் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் தெரியாது. 1ம் எதிர்மனுதார் 2ம் எதிர்மனுதார் காப்பீடு நிறுவனத்தில் பின்னால் அமர்ந்து செல்பவர்க்கு காப்பீடு எதுவும் செய்யவில்லை என்றால் தெரியாது. விபத்து சமயத்தில் என் தகப்பனாருக்கு 54 என்றால் சரிதான். பல்வேறு இனங்களில் நாங்கள் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதார் என்பதால் அவர்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. பாலிசி விதிமுறைகளை மீறி வாகனத்தை

இயக்கியுள்ளதால் 2ம்எதிர்மனுதார் நிறுவனம் எந்த வித இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நானோ, மற்ற மனுதாரர்களோ என் தகப்பனாரை சார்ந்து வாழவில்லை என்றால் எங்களுக்கு எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.